இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

தம் மக்களை வழிநடத்தும் மேய்ப்பர்களுக்கு எதிராக இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவர் கூறுவது இதுவே: நீங்கள் என் மந்தையைச் சிதறடித்துவிட்டீர்கள்; அதனைத் துரத்தியடித்தீர்கள்; அதனைப் பராமரிக்கவில்லை. இதோ உங்கள் தீச்செயல்களின் காரணமாக உங்களைத் தண்டிக்கப் போகிறேன் என்கிறார் ஆண்டவர். என் மந்தையில் எஞ்சியிருக்கும் ஆடுகளை, நான் துரத்தியடித்த அனைத்து நாடுகளிலிருந்தும் கூட்டிச் சேர்த்து அவர்களுக்குரிய ஆட்டுப்பட்டிக்குக் கொண்டுவருவேன். அவையும் பல்கிப் பெருகும். அவற்றைப் பேணிக் காக்க நான் மேய்ப்பர்களை நியமிப்பேன். இனி அவை அச்சமுறா; திகிலுறா; காணாமலும் போகா, என்கிறார் ஆண்டவர். (எசாயா 23:1-4)

# எந்த இயந்திரமும் மனிதரின் உயிரைப் பறிக்கக் கூடாது

## திருத்தந்தை வேண்டுகோள்!

வத்திக்கான்: கடந்த ஜூலை 8, 9 ஆகிய தேதிகளில் ஜப்பானின் ஹிரோஷிமா நகரில் 'செயற்கை நுண்ணறிவு அமைதிக்கான நெறிமுறைகள்' என்ற தலைப்பில் உலகின் முக்கிய சமயங்களின் தலைவர்கள் ஒன்று கூடி கலந்துரையாடி வரும் உலக மன்றத்திற்கு வழங்கியுள்ள செய்தியில் மேற்கண்டவாறு கருத்துரைத்துள்ளார் திருத்தந்தை.

### மனிதர் இதயங்களில் தீர்மானிக்கும் திறன் கொண்டவர்கள்.

ஒரு முடிவு என்பது ஒரு தேர்வின் செயல் நெறிமுறை என்று நாம் அழைக்கலாம், மற்றும், இது நடைமுறை மதிப்பீட்டைக் கோருகிறது என்று செயற்கை நுண்ணறிவு குறித்துத் தெளிவுபடுத்தியுள்ளார் திருத்தந்தை.

சில வேளைகளில், ஆளும் கடினமான பணிக்கு மத்தியில், பலருக்கு விளைவுகளை ஏற்படுத்தும் முடிவுகளை எடுக்க நாம் அழைக்கப்படுகிறோம் என்று குறிப்பிட்டுள்ள திருத்தந்தை, இது சம்பந்தமாகப் பார்க்கும்போது, மனித பிரதிபலிப்பு, எப்பொழுதும் ஞானம், கிரேக்க தத்துவத்தின் ஃபிரோனிசிஸ் (நடைமுறைச் செயலுடன் தொடர்புடைய ஒரு வகையான ஞானம் அல்லது அறிவாற்றல்) மற்றும், குறைந்தபட்சம், புனித நூலின் ஞானம் பற்றி பேசுகிறது என்றும் விளக்கியுள்ளார்.

### முடிவெடுக்கும் திறன் மனிதரிடம் விடப்பட வேண்டும்

இயந்திரங்களின் அதிசயிக்கத்தக்க செயல்களை நாம் எதிர்கொள்ளும்போது, சுதந்



ஹிரோஷிமா நகரில் உலகின் முக்கிய மதங்களின் தலைவர்கள்

திரமாகத் தேர்ந்தெடுப்பது எப்படி என்று தோன்றுகிறது என்று உரைத்துள்ள திருத்தந்தை, முடிவெடுப்பது என்பது, அதன் சில வேளைகளில் வியத்தகு மற்றும் அவசர அம்சங்களை எதிர்கொண்டாலும், எப்போதும் அது மனித நபரிடம் விடப்பட வேண்டும் என்பதில் நாம் தெளிவாக இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இயந்திரங்களின் தேர்வுகளை நம்பியிருப்பதன் வழியாக, தங்களைப் பற்றியும் அவர்களின் வாழ்க்கையைப் பற்றியும் முடிவெடுக்கும் மக்களின் திறனைப் பறித்தால், நம்பிக்கையற்ற எதிர்காலத்திற்கு மனிதகுலத்தை நாம் கண்டனம் செய்வோம். இயந்திரங்களின் விருப்பங்களைச் சார்ந்து மக்களை அழிவுக்கு உள்ளாக்குவதன் வழியாக, தங்களைப் பற்றியும் அவர்களின் வாழ்க்கையைப் பற்றியும் முடிவெடுக்கும் மக்களின் திறனை நாம் பறித்தால், நம்பிக்கை இல்லாத எதிர்காலத்திற்கு மனிதகுலம் தள்ளப்படும் என்றும் எச்சரித்துள்ளார் திருத்தந்தை.

### மனிதமாண்பு பாதுகாக்கப்பட வேண்டும்

செயற்கை நுண்ணறிவுத் திட்டங்களால் செய்யப்படும் தேர்வுகளின் மீது சரியான மனிதக் கட்டுப்பாட்டிற்கான இடத்தை நாம் உறுதிசெய்து பாதுகாக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மனித மாண்பு தன்னிலேயே அதைச் சார்ந்துள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

உங்களின் இந்தத் தொடக்க முயற்சியைப் பெரிதும் பாராட்டுகிறேன் என்று கூறியுள்ள திருத்தந்தை, இயந்திரங்களின் இந்தப் புதிய சகாப்தத்தில் மனித மாண்பைப் பாதுகாக்க ஒரு செயலூக்கமான அர்ப்பணிப்பைக் கோருவதில் நாம் ஒன்றுபட்டுள்ளோம் என்பதை உலகுக்குக் காட்டும்படி உங்களைக் கேட்டுக்கொள்கிறேன் என்றும் விண்ணப்பித்துள்ளார்.

### ஆயுதங்களின் ஆதிக்கத்தைத் தடை செய்வோம்

உலகில் ஆயுதமோதல்கள் நிகழ்ந்துவரும் இந்தச் சோகமான தருணத்தில், 'கொடிய தன்னாட்சி ஆயுதங்கள்' என்று அழைக்கப்படும் சாதனங்களின் வளர்ச்சி மற்றும் பயன்பாட்டை மறுபரிசீலனை செய்வது அவசரமானது என்பதை சகோதரர் சகோதரிகளாக ஒன்றிணைந்து, உலகிற்கு நினைவூட்டுவது மிகவும் முக்கியமானது என்றும், அவற்றின் பயன்பாட்டைத் தடை செய்யுங்கள் என்றும் இம்மன்றத்தின் பங்கேற்பாளர்களைக் கேட்டுக்கொண்டுள்ளார் திருத்தந்தை.

-செல்வராஜ் சூசைமாணிக்கம் - வத்திக்கான்

# கோலாலம்பூர் மாமறை மாவட்டத்தின் தமிழ் திருத்தூது ஆணையம் தியான நிகழ்வில் கலந்துகொண்டது.

**கோலாலம்பூர்** : கடந்த ஜூலை மாதம் 6-ஆம் திகதி, சனிக்கிழமையன்று, இங்குள்ள டேசா ஜெயா, கிறிஸ்து ஒளி பங்கில், கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் தமிழ் திருத்தூது பணிக்குழுவின் அங்கத்தினர்களுக்கென்று ஒருநாள் சிறப்பு தியான நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. அப்பணிக்குழுவின் தலைவர் யேசுதாஸ் அந்தோணிசாமி அவர்கள் ஒவ்வொரு பங்கிலிருந்தும் வருகைத் தந்த அங்கத்தினரையும் செயலவை சார்பில் வரவேற்றார். இப்பங்கின் பங்குத்தந்தை அருள்பணி பீட்டர் அந்தோணி அவர்களால் மேற்கண்ட தியானம் வழிநடத்தப்பட்டது.

ஏறக்குறைய ஐம்பது பேர் பங்கேற்ற இத்தியானம் அன்று காலை 9.00 முதல் மாலை 4.30 மணிவரை நடைபெற்றது. சகோதரர் அருள் பிரகாஷ் அவர்கள் தலைமைத்துவத்தில் எதிர்நோக்கும் சவால்களை எப்படி எதிர்நோக்குவது என்பதை மிகவும் தெளிவாக விளக்கினார். அவர் ஒவ்வொருவரிடமும் ஒரு பலூனைக் கொடுத்து, அதனை ஊதச் சொல்லி ஊசியால் உடைக்க சொன்னார். நமது திருஅவையும் அப்படித்தான். கட்டி எழுப்புதல் மிகவும் கடினம் என்றும், அதை உடைப்பது மிகவும் எளிது என்று மிகவும் தெளிவாக விளக்கினார்.

தொடர்ந்து அருள்பணி பீட்டர் அந்தோணி



அவர்கள் பணித்துவம் என்றல் என்ன என்பது பற்றியும், ஒரு தலைமைத்துவத்தை எப்படி தேர்ந்தெடுப்பது என்பது பற்றியும் விளக்கினார்.

தாலந்து உவமை, திராட்சை தோட்ட பணியாளர்கள் மற்றும் விழிப்பாயிருக்கும் பணியாளர்கள் போன்ற உவமைகளைக் கொண்டு கடவுள் நமக்கு கொடுத்தத் திறமைகளை வைத்து அதற்கு ஏற்ப நாம் எப்படி பணி செய்ய வேண்டும் என்றும், தலைமைப் பொறுப்பாளர்கள் எப்படி தங்களைத் தாழ்த்தி இயேசுவை போல்

தொடர்ச்சி, அடுத்தப் பக்கம்.

# கூலாய், கிறிஸ்து அரசர் பங்கில் விவிலியப் புதிர் போட்டி

**ஜொகூர், கூலாய்:** இங்குள்ள கிறிஸ்து அரசர் பங்கில், தமிழ் மேய்ப்புப் பணிக்குழு இளைஞர்களின் முயற்சியில், பொறுப் பாளர்கள் மற்றும் பெற்றோர்களின் ஆதரவுடன், திருவிவிலியத்தில் காணப் படும் விடுதலைப் பயணம் நூலிலிருந்து விவிலியப் புதிர்போட்டி நிகழ்ச்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் சுமார் 28 மறைக்கல்வி

இப்போட்டி நிகழ்ச்சியில் மாணவர்களும் ஆசிரியர்களும் வெளிப்படுத்திய ஆர்வம் அடுத்தடுத்து இதுபோன்ற பலவேறு விவிலியப் போட்டி நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்ய பணிக்குழுவிற்கு ஆர்வம் பிறந்துள்ளது என்றால் மிகையாகாது. மேலும், இப்போட்டி நிகழ்வு பங்கு இளைஞர்களுக்கும் ஒரு சிறந்த அனுபவமாக இருந்து என்று இளை ஞர்களால் உணரப்பட்டது.




மாணவர்கள் கலந்துப் பயனடைந்தனர். இந்த நிகழ்வின் மூலம், மோசேயின் போற்றத்தக்க குணங்கள், அழைப்பு மற்றும் கடவுளின் திட்டம் மற்றும் அவரின் அன்புப் பணி பற்றிய ஆழமான புரிதலை மாணவர் பெற்றனர்.

நிறைவாக, இப்போட்டி நிகழ்ச்சிக்கு முழு ஆதரவு நல்கிய பங்குத்தந்தைக்கும் உடனிருந்து வழிகாட்டிய திருத்தொண்டர் அருமைதாஸ் அவர்களுக்கும் பணிக்குழு வினர் நன்றி மாலை சூட்டினர்.

*-மார்க் மைக்கல்*

*முதல் பக்கத் தொடர்ச்சி.*

தாழ்மையாக இருக்க வேண்டும் என்பதை அழகாக விளக்கினார். போட்டி பொறாமைகள் இல்லாமல், ஏற்ற தாழ்வு இல்லாமல் அனைத்துப் பணியாளரகள் பணியில் ஈடுபட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

இறுதியாக நாம் இயேசுவின் அழைப்பை ஏற்று, எங்கும் எப்போதும் உப்பாகவும் ஒளியாகவும் இருக்க வேண்டும் என்று தியான நிகழ்வை முடித்து வைத்தார். பணித்துவம் என்பது பணியே சீடத்துவம் என்பதன் பொருள் உணரப்பட்டது.

மேற்கண்ட கோலாலம்பூர் மாமறை மாவட்டத்தின் தமிழ் திருத்தூது ஆணையம்



அருள்தந்தையின் ஆதரவுக்கு நன்றி கூறி விடைப்பெற்றுச் சென்றனர்.

-நேச தேவசகாயம்

# காஜாங், திருக்குடும்பப் பங்கில் மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான உருவாக்கப் பயிற்சி நடைபெற்றது

*காஜாங்:* கடந்த வாரம் ஜூலை திங்கள் 6-ஆம் திகிதி, சனிக்கிழமையன்று, தமிழ், ஆங்கிலம், சீனம் மற்றும் மலாய் மொழிகளில் ஒரே சமயத்தில் நான்கு அறைகளில் மறைக்கல்வி ஆசிரியர்களுக் கான சிறப்பு தியானம் கலந்த உருவாக் கப்பிற்சி நடைபெற்றது. பங்கின்

சகோ. ஆர். கே. மறைக்கல்வியின் அடிப் படை நோக்கம், சத்திக்கும் சவால்கள், சிறுவர்கள் மற்றும் இளையோருக்கான மறைக்கல்வியின் போதனாமுறை பற்றியும் விவரித்தார்.

தொடக்கத்தில் புனித லூக்கா அவரது நற்செய்தியை தியோப்பில் அவர்களுக்கு



தமிழ் மொழி பிரிவில் பங்கேற்றவர்கள்

மறைக்கல்விக்கான ஒருங்கிணைப்பாளர் சகோ. தோமஸ் சந்தியாகு திறம்பட இப்பயிற்சிக்கு ஏற்பாடு செய்திருந்தார்.

ஆங்கிலப் பகுதிக்கு அருள்பணி சுரேன் துறைராஜ் அவர்களும், மலாய்ப் பகுதிக்கு அருட்சகோதரர் இந்திரா அலெக்ஸ் அவர்களும், சீனப் பகுதிக்கு அருள்பணி பிலிப் சுவா அவர்களும், தமிழ்ப் பகுதிக்கு சகோ. ஆர்.கே.சாமி அவர்களும் பொறுப் பேற்று வழிநடத்தினார்.

தமிழ்ப் பேசும் மறைக்கல்வி ஆசிரியர்கள் பங்கின் தமிழ் மறைக்கல்வி பணிக் குழுவின் தலைவி ஜெசிலியா ஜேக்கப் அவர்களுடன் பங்கேற்றனர்.

எவ்வாறு, அவர் கேட்ட செய்தியை ஆய்ந்தறிந்து, ஒழுங்குப்படுத்தி போதித்தார் என்பதை குழு விவாத கலந்துரை யாடலுக்குப் பின் தெளிவாக விளக் கினார். தொடர்ந்து, பாடத்திட்டம் மற்றும் பாடத் தயாரிப்புக் குறித்தும் அதன் அவசியத்தையும் தெளிவுப்படுத்தினார்.

நிறைவாக, நான்கு மொழி பிரிவினரும் மண்டபத்தில் ஒன்றுகூடிய வேளையில் பங்குத் தந்தை அருள்பணி மைக்கல் சுவா அவர்கள் ஆசிரியர்கள் மத்தியில் உரையாற்றி அனைவருக்கும் நன்றி நவில்ந்தார்.

*-ஜெசிலியா ஜேக்கப்*







# நாமும் இயேசுவிடம் கணக்குக் காட்ட வேண்டும்!

இன்று, ஆண்டின் பொதுக்காலம் பதினாறாம் ஞாயிறை கொண்டாடுகி றோம். இன்று வாசிக்கப்படும் முதல் இரண்டு வாசகங்களும், ஆண்டவர் தாமே நமது நல்ல ஆயன் என்றும், அவர் நம்மைப் பேணிகாப்பவர் என்றும், அவரைப் பற்றிக் கொண்டால் ஒருபோதும் அச்ச முற வேண்டியதில்லை, திகிலுற வேண்டியதில்லை என்றும் நமக்கு அறிவுறுத்தப்படுகிறது. அருகிலேயே இருக் கும் ஆண்டவர் நம்மோடு ஒன்றிக்கிறார் எனும் படிப்பினைத் தெளிவுப்படுத்தப் படுகிறது.

நற்செய்தியில், அனுப்பப்பட்ட சீடர்கள் அனைத்தும் திரும்பி வந்து இயேசுவிடம் அறிக்கைச் சமர்ப்பிக்கிறார்கள். அறிக்கை யைக் கேட்டு தெளிவுப்பெறுவதற்குப் பதிலாக, சீடர்களின் தேவைகளை அவர் பூர்த்திச் செய்ய விரும்புகிறார்.

அழைக்கப்பட்டவர்கள் என்பதால் சீடர் களின் மனிதத் தேவைகள் மறைந்து விடவில்லை. அவர்களும் மனிதர்களே. ஏனைய மனிதர்களைப் போலவே அவர்-களுக்கும் உடல் சார்ந்த தேவைகள் உண்டு. அவை நிறைவுச் செய்யப்பட வேண்டும். மனிதராகப் பிறந்து மனிதராக வாழ்ந்த அவர், தன்னுடைய சீடர்களுக்கு என்ன தேவை என்பதை அவர்களைக் கேட்காமலேயே புரிந்து கொள்கிறார். அயராது பணி செய்து களைத்து வந்தவர்களுக்கு உடனடி தேவை ஓய்வு என்பதைப் புரிந்து அதைச் செயலிலும் வெளிப்படுத்துகிறார்.

தங்களது தேவைகளுக்காக மக்களைப் பயன்படுத்தி விட்டு, மக்களின் தேவைகளில் பாராமுகமாயிருக்கும் நமது இன்றையத் தலைவர்களுக்கு இயேசு ஒரு சவால். அதே அமயத்தில் தேடி வந்த மக்கள் ஆயனில்லா ஆடுகள் போல் இருந்ததால் அவர்கள் மீது பரிவு கொண்டு பலவற்றைக் கற்பிக்கத் தொடங்குகிறார். என்னே அவரது மனித நேயம். தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் மீதும் பரிவு, தேடி வந்தவர்களின் மீதும் பரிவு. நமது ஆண்டவர் இரக்கத்தின் ஆண்டவர், அக்கறையின் ஆண்டவர் என்பது வெளிப்படுகிறது.

மாற். 11:28-ல் வாசிப்பது போல 'பெருஞ் சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே எல்லோரும் என்னிடம் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்' எனும் இயேசுவின் கூற்று மனம் துயருறுவோருக்குச் சிறந்த ஆறுதல் வார்த்தைகளாகும்.

எனவே, இயேசுவைப் பின்பற்றும் நம் மிலும் இயேசுவிடம் காணப்படும் பரிவு, இரக்கம், கருணை, மனித நேயம் ஆகிய குணங்கள் இருத்தல் நலமே.

இரக்கமும், பரிவும் இல்லாத இடங் களில்தான் ஏழைகளும், பணியாளர்களும் அதிகமாக இருப்பர். எப்பொழுது நமக்கு கருணைக் காட்ட நம்மைப் புரிந்து கொள்ள நல்ல மனிதர்களும், நல்ல மனமுள்ளவர்களும் உள்ளனர் என்ற உணர்வு எழுகிறதோ அப்பொழுது மனிதன் மனவலிமை பெறுகிறான். அவர்களின் குழப்பங்கள் விலகுகின்றன. கவலைகள் மறைகின்றன. பிறருக்காக இரக்க உணர்வுடன் அன்பொழுக பணி செய்ய முன் வரும்போது உண்மைச் சீடராக வெளிப்படுத்தப் படுகிறோம்.

எனவே, நாம் நமது குடும்பத்தில், நண்பர்களிடத்தில், சமுதாயத்தில், கிறிஸ்துவின் வழிகாட்டிகளாக இருக்க வும், இயேசுவின் மந்தைக்கு அமைதி யைக் கொடுக்கவும், கிறிஸ்துவின் கொள்கைகளைப் பின்பற்றி வாழவும் அருள்கேட்டு, மன்றாடுவோம்.

ஆ.வி. டேவிட், குளுவாங்

**பொதுக்காலம்-16-ஆம் ஞாயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம் | எரே 23:1-6 |
| திரு.பாடல் | 23: 1-3a. 3b-4. 5, 6 |
| 2-ம் வாசகம் | எபே 2:!3-18 |
| நற்செய்தி | மாற்கு 6: 30-34 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2 (B)**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை- வாரம் 3**